# பத்திரிகைச் செய்தி

Ontario

**அட்டர்னி ஜெனரல்**
**அமைச்சகம்**

உடனடி வெளியீட்டுக்காக
20 பிப்ரவரி 2006

**மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்துகிறது ஒன்டாரியோ அரசு**
*பொதுமக்களுக்கு மேம்பட்ட சேவை வழங்குவதே உத்தேசித்துள்ள மாற்றத்தின் நோக்கம்*

டொரோன்டோ - மக்களுக்கான சேவையை மேம்படுத்தக்கூடிய வலுவான, விரைவான, மேலும் பயன்தரக்கூடிய மனித உரிமைகள் அமைப்பாக ஆக்குவதே மெக்கின்டி அரசு முன்வைத்துள்ள மாற்றங்களின் நோக்கமாகும் என்று அட்டர்னி ஜெனரல் மைக்கேல் பிரையன்ட் இன்று அறிவித்தார்.

"ஒன்டாரியோ மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு முன்னெப்போதையும்விட மேம்பட்ட சேவை வழங்க விரும்புகிறோம்," என்றார் திரு பிரையன்ட். " புகார் நடைமுறையையும், மக்கள் குழுக்கள் மற்றும் தனிநபர்களின்மீது தாக்கம் விளைவிக்கக்கூடிய சிக்கலான மனித உரிமைகள் விஷயத்தில் மேம்பட்ட நடவடிக்கை எடுக்கவும் விரும்புகிறோம். மனித உரிமைகளை மேம்படுத்துவது, முன்னெடுத்துச் செல்வது, நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கம்." என்றார் அவர்.

ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம் (Ontario Human Rights Commission) மற்றும் ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயம் (Human Rights Tribunal of Ontario) ஆகியவற்றை உள்ளடக்கிய தற்போதைய மனித உரிமைகள் அமைப்பு, ஒன்டாரியோ மனித உரிமைகள் சட்டத்தை (Ontario Human Rights Code) நடைமுறைப் படுத்துவதற்காக 1962இல் உருவாக்கப்பட்டதாகும்; இது கனடாவிலேயே முதலாவதாகும். இந்த ஆணையம், அட்டர்னி ஜெனரல் வாயிலாக சட்டமன்றத்துக்குப் பதிலளிக்கும் பொறுப்புடைய சுதந்திர அமைப்பாகும். தற்போது இந்த அமைப்பு மக்கள் கல்வி மற்றும் ஆய்வுகளை நடத்துகிறது; மனித உரிமைகள் புகார்களைப் பெறுவது, தீர்த்து வைப்பது மற்றும் விசாரிக்கும் பணிகளை மேற்கொள்கிறது. ஆணையத்தால் முன்வைக்கப்படும் வழக்குகளை தீர்ப்பாயம் விசாரித்து முடிவு செய்கிறது.

வசந்த காலத்தில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிற, உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அமைப்பின் சட்டவரைவின்படி, அமைப்புரீதியான பாகுபாடுகளை கவனிப்பதற்காக மனித உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதிலும், செயல்முனைப்பு நடவடிக்கைகளின் மூலம் பாகுபாடுகளைத் தடுப்பதிலும், மக்கள் கல்வி, ஆய்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் ஆணையம் கவனம் செலுத்தும். ஆணையத்துக்குள்ளேயே இனவாத-எதிர்ப்பு செயலகம் ஒன்றையும் அரசு உருவாகும்; இது, இனவாதத்தை தடுப்பதற்கான ஆய்வு மற்றும் கொள்கை விஷயங்களில் பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் தலைமை ஆணையருக்கு வழங்கும்.

ஒரு புகாரை தன் சார்பில் நேரடியாகப் பதிவு செய்கிற. அல்லது முத்தரப்பாயத்துடன் தலையிட்டுச் செயல்படும் அதிகாரத்தை ஆணையமே வைத்திருக்கும். இதற்கிடையில், தீர்ப்பாயமானது,

தனிநபர்கள் அல்லது குழுக்கள் புகார்களை நேரடியாக தன்னிடம் கொண்டு வந்து தீர்த்துக் கொள்ள அனுமதித்து, நவீனமான, ஒழுங்குபடுத்தப்பட்ட, பயன்தரக்கூடிய வகையில் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழியை அளிக்கும்.

“குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்திருக்கிறது என்றாலும்கூட, புகார் நடைமுறையை விரைவுபடுத்தவும், பணியிடங்கள், குடியிருப்புகள் மற்றும் சேவைகளில் மனித உரிமைப் பண்பாட்டை மேம்படுத்தவும் மாற்றம் தேவை என்று ஆணையம் நீண்ட காலமாகக் கோரி வந்திருக்கிறது. இந்த இலக்குகளை எட்ட உதவக்கூடிய, மனித உரிமைகளில் ஒன்டாரியோவை சர்வதேச அளவில் எப்போதும தலைமையிடம் வகிக்கச் செய்கிற புதுப்பிக்கப்பட்ட அமைப்பை உருவாக்குவதில் நாங்கள் அரசுடன் இணைந்து செயல்படுவோம்,” என்றார் ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமை ஆணையம் பார்பரா ஹில்.

“மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளாகும். ஒன்டாரியோவாசிகள் அனைவருக்கும் நியாயமான, ஒளிவுமறைவற்ற சட்ட நடைமுறைப்படுத்தலும், வழக்குத் தீர்வும் உரிய நேரத்தில் கிடைக்க வேண்டியது அவசியம்,” என்றார் ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தலைவர் மைக்கேல் கோத்தெய்ல். “மாற்றம் தேவை என்று பலரும் பல காலமாகக் கோரி வருகின்றனர். இந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதிலும், சட்டத்தின் முக்கியமான நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய விதிகள் மற்றும் நடமுறைகளை வகுக்க உதவி செய்வதிலும் தலைவர் என்ற முறையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்” என்றார் அவர்.

“அமைப்பில் முக்கியமான மாற்றங்களை அரசு மேற்கொள்வதை அறிந்து நாங்கள் மகிழ்கிறோம். இவை நீண்ட காலமாகவே தேவைப்படுபவை. சகிப்புத்தன்மையை மேம்படுத்தக்கூடிய, மனித உரிமை மீறல்களை மேலும் சிறப்பாகக் கையாளக்கூடிய மனித உரிமைகள் அமைப்பு என்பது ஒன்டாரியோவாசிகள் கண்ணியமாகவும் மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்யும்” என்றார் ஒன்டாரியோ வாடகைதாரர் சார்பு மையத்தின் (Advocacy Centre for Tenants Ontario) இயக்குநர் கேத்தி லேயர்டு.

“மனித உரிமைகளை முன்னேற்றுவதில் ஒன்டாரியோ சர்வதேசத் தலைமையாக எப்போதும் இருக்கச் செய்வதும், பாகுபாடுகளை எதிர்கொள்பவர்கள் நீதியை அணுகுவதற்கான வழிகளை மேம்படுத்துவதும் எமது நோக்கமாகும்” என்றார் பிரையன்ட்.

- 30 -

தொடர்புகள்:

கிரெக் க்ரோன் (Greg Crone)
அமைச்சு அலுவலகம் (Minister’s Office)
*(416) 326-1785*

பிரெண்டன் கிராலி (Brendan Crawley)
தொடர்புப் பிரிவு (Communications Branch)
*(416) 326-2210*

www.attorneygeneral.jus.gov.on.ca

பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.

TTY: 416-326-4012

இந்த ஆவணம் 14 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படுகிறது
மொழியாக்க வடிவங்கள் இந்த இணையத்தில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca.